## தமிழ்நாடு ஆளுநரின் செயல் சட்டவிரோதம் - உச்சநீதிமன்றம்!






உச்ச நீதிமன்றம் மாநில முதல்வர்களே பல்கலைக்கழக வேந்தராகப் பொறுப்பேற்கலாம் என்று தீர்ப்பு வழங்கியதை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட செயலாளர் ஜெயபாலன் தலைமையில் குத்துக்கல்வலசை பகுதியில் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் ஆறுமுகசாமி, கென்னடி கனிமொழி, அழகு சுந்தரம், வெங்கடேசன், மேலகரம் சுடலை இளஞ்சி முத்தையா, சுந்தர்ராஜன், ஆனந்தன், தகவல் தொழில்நுட்ப அணி அழகு தமிழ் சங்கர் சபிக்கலி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு அவசர ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ.அறிக்கை!

விழுப்புரம், ஏப். 9-

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு ஆலோசனைக்கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப.சேகர் தலைமையில் 12.04.2025 சனிக்கிழமை அன்று பகல் 12.00 மணி அளவில் மைலம் ஒன்றியம் தீவனூர் G.J. திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும்உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. பாகமுகவர்கள் (BLA 2)ஒருங்கிணைந்து தேர்தல் பணிகள் மேற்கொள்ளுவது சம்பந்தமாக,

2.கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்தநாள் விழா மற்றும் பட்ஜட் விளக்க பொதுக் கூட்டங்கள் நடத்துவது சம்பந்தமாக,

3.கழக ஆக்கப் பணிகள் சம்பந்தமாக.

இவர் அவர் தெரிவித்துள்ளார்.

### இலக்கியச் செல்வர் மறைந்த

# அய்யா குமரி அனந்தன் திருவுடல் அரசு மரியாதையுடன் அடக்கம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஏப். 10 –

“மறைந்த இலக்கியச் செல்வர் அய்யா குமரி அனந்தன் அவர்களின் திருவுடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும்” என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

காங்கிரஸ் பேரியக்கத்தின் மூத்த தலைவர், இலக்கியச் செல்வர் அய்யா குமரி அனந்தன் அவர்கள் மறைவுற்ற செய்தியை அறிந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது வேதனையும், வருத்தத்தையும் தெரிவித்துள்ளதோடு, மறைந்த குமரி அனந்தன் அவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் தமிழ்ச் சமுதாயத்திற்கும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் அரும்பணியாற்றிய அய்யா குமரி அனந்தன் அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் “தகைசால் தமிழர்” கடந்த ஆண்டு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

தமிழே தன் மூச்செனத் தமிழ்த் திருப்பணிக்காக வாழ்ந்திட்ட அய்யா குமரி அனந்தன் அவர்களின் பெருவாழ்வைப் போற்றிடும் வகையில், அவரது திருவுட லுக்கு அரசு மரியாதையுடன் பிரியாவிடை அளிக்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### நேர்மையான, நியாயமான பாதை வெற்றியைப் பெற்றுத் தரும் என்பதில் உறுதிகொண்டவர் நம் முதலமைச்சர்!

# தமிழ்நாட்டை மேலும் தலைநிமிரச் செய்திருக்கிறார்!

### தமிழ்நாட்டு மக்கள் சார்பில் நன்றி! பேரவையில் – அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

**சென்னை, ஏப். 10 –**

**உச்சநீதிமன்றத் தீர்ப்பை அடுத்து சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, ‘‘தமிழ்நாட்டை மேலும் தலைநிமிரச் செய்திருக்கிறார், நமது முதல்வர் அவர்கள்!’’ என்று குறிப்பிட்டார்.**

அமைச்சர் எஸ்.ரகுபதி கூறியதாவது:-

முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே சட்டப் போராட்டம் நடத்தி பெற்றுத் தந்திருக்கின்ற அந்த வரலாற்றுத் தீர்ப்பு என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டும் பெருமையினைப் பெற்றுத் தருகின்ற தீர்ப்பு அல்ல; அகில இந்திய அரசியலுக்கும், அரசியல்வாதிகளுக்கும், இந்தியாவிலே இருக்கக்கூடிய பல்வேறு மாநிலங்களுக்கும் சிறப்புச் சேர்க்கின்ற வகையிலே அவர்கள் பெற்றுத் தந்திருக்கிற தீர்ப்பு என்பது யாராலும் மறுக்கமுடியாத ஒரு தீர்ப்பு ஆகும்.



முதலமைச்சர் அவர்கள் பெற்றுத் தந்திருக்கிற அந்த தீர்ப்பு களிலே ஒருசிலவற்றை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். சட்டப்பேரவையிலே இரண்டாவது முறையாக நிறைவேற்றி அனுப்பிய 10 மசோதாக்களுக்கு ஆளுநர் அன்றைய தினமே ஒப்புதல் தந்திருக்க வேண்டும் என்கிற தீர்ப்பை உச்ச நீதிமன்றம் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற முடிவிற்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய வெற்றி.

**நீதிமன்றத்தில் ஒலித்த நமது குரல்!**

அடுத்ததாகச் சொல்லப்போவோமேயானால், “தமிழ்நாடு அரசு இரண்டாவது முறையாக நிறைவேற்றி அனுப்பிய அந்த 10 மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்பியது செல்லாது’’ என்று உச்ச நீதிமன்றம் அடித்துச் சொல்லி இருக்கின்றது. இதுவும் நம்முடைய குரல் இன்றைக்கு நீதிமன்றத்திலே ஒலித்துக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு இந்தியாவிலே இருக்கின்ற எதிர்க்கட்சி ஆளுகின்ற மாநிலங்களுக்கெல்லாம் குரல் கொடுக்கக் கூடிய ஒரு முதலமைச்சர். இன்றைக்கு அகில இந்தியத் தலைவர் என்பதை இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பின் மூலமாக அவர்கள் நிருபித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மூன்றாவதாக சொல்லப்போவோமேயானால் ‘‘ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களின் செயல்பாடுகள் நேர்மையானதாக இல்லை’’ என்று உச்ச நீதிமன்றம் சொல்லி இருக்கிறது; நாங்கள் சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக, ‘‘மாநில அரசுக்கு ஆளுநர் வீண் தடைகளை ஏற்படுத்தக்கூடாது, அது மக்கள் நலன்களைப் பாதிக்கும்’’ என்று நாங்கள் சொல்லவில்லை; உச்ச நீதிமன்றம் சொல்லி இருக்கிறது.

**கண்டனம்!**

அடுத்ததாகச் சொல்லப்போவோமேயானால் ‘‘உயர் அதிகாரத்திலே இருப்பவர்கள் அரசியல் சாசனத்தின் முக்கிய அம்சங்களைப் பின்பற்ற வேண்டும் என்று ஆளுநருக்கு உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

இதிலிருந்து முதலமைச்சர் அவர்கள் என்றைக்குமே சட்டத்தின்மீது நம்பிக்கை உள்ளவர்கள். தனக்கு சட்டப் போராட்டம் என்றைக்கும் வெற்றியைத் தரும். ஏன் என்று சொன்னால், தான் செல்கின்ற பாதை நியாயமான, நேர்மையான பாதை. அந்த நேர்மையான, நியாயமான பாதை தனக்கு வெற்றியைப் பெற்றுத்தரும் என்பதிலே உறுதியாக உள்ளவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். எனவேதான், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை இன்றைக்கு நமக்கு அவர்கள் பெற்றுத் தந்திருக்கிறார்கள். இதனால் இன்றைக்கு தமிழ்நாட்டை தலைநிமிரச் செய்திருக்கிற முதலமைச்சர் என்கிற பெருமையை தமிழ்நாட்டிற்குப் பெற்றுத் தந்திருக்கிற அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேரினுடைய சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதிகுறிப்பிட்டார்.



கழக தலைவர் அவர்களின் தலைமையிலான கழக ஆட்சியில் வரையறுக்கப்பட்டு ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட 10 மசோதாக்களை நிறைவேற்றாமல் காலம் தாழ்த்திய ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைக்கூலியான ஆளுநர் ரவியைக் கண்டித்து வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை வழங்கிய உச்ச நீதிமன்றத்தின் நீதி அரசர்களை பாராட்டியும், அந்த தீர்ப்பின் வாயிலாக பல்கலைக்கழகங்களின் வேந்தராக தகுதி பெற்ற கழகத்தலைவர் அவர்களை வாழ்த்தியும் பாராட்டியும் திருநெல்வேலி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இரா ஆவுடையப்பன் ஆலோசனையின் பேரில் நாங்குநேரி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக ஆர்.எஸ். சுடலைகண்ணு தலைமையில் நாங்குநேரி மேற்கு ஒன்றிய திமுக அலுவலகம் முன்பு பட்டாசுகள் வெடித்தும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடப்பட்டது. இதில் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட மசோதாக்களை தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கு எதிராகவும், அரசியலமைப்பு சட்டத்திற்கு விரோதமாகவும், நிறுத்தி வைத்திருந்த ஆளுநருக்கு எதிராக, தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை உச்சநீதிமன்றம் வழங்கியுள்ளது. கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்த வெற்றி தமிழ்நாடு மட்டுமின்றி ஒட்டுமொத்த இந்திய மாநிலங்களின் உரிமைக்கான வெற்றி.நமது உரிமைக்கான வெற்றியை கொண்டாடும் வகையில் நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி வண்ணார் பேட்டையில் நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் தலைமையில் இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.உடன் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் மண்டலம் 9–இல், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 12.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | 1 | தியாகராய நகர் | ஆதித் ஹால், முத்துரங்கன் சாலை, தியாகராய நகர் |
| 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | மயிலாப்பூர் | மகிழ் ஹால், சிருங்கேரி மடம் சாலை, ஆர்.ஏ.புரம், மயிலாப்பூர் |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | அண்ணா நகர் | அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தக்கரை |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 9 | தூத்துக்குடி | கலைஞர் அரங்கம், தூத்துக்குடி |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | கோவில்பட்டி | சௌபாக்கியா மஹால், கோவில்பட்டி |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 02-04-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி